# பாக்கியமும், பதிலும்

**அவர்கள் அவனை நோக்கி: உன் மனைவி சாராள் எங்கே என்றார்கள்? அதோ கூடாரத்தில் இருக்கிறாள் என்றான். (ஆதி 18:9)**

மறைவிடம் என்பது ஆண்டவருக்கு மறைவானது அல்ல; ஒளிப்பிடத்திலிருந்தாலும், அவரது விழிகளுக்கோ நாம் வெளிப்படையானவர்களே. ஆண்டவருக்காக நாம் செய்யும் காரியங்கள் மனிதர்களால் மறைக்கப்பட்டாலும், கர்த்தரால் மறக்கப்படுவதில்லை; பலனை நிச்சயம் நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவந்து சேர்க்கும் பெலனுடையவைகள் அவைகள். ஆபிரகாம் ஆண்டவரை கூடாரத்திற்கு வெளியே சந்தித்தபோது, சாராளோ கூடாரத்திற்கு உள்ளேயே இருந்தாள்; என்றபோதிலும், ஆசீர்வாதம் கூடாரத்திற்கு உள்ளே இருந்த சாராளுக்குச் உரியதானது.

ஆண்டவரையும், இரண்டு தூதர்களையும் ஆபிரகாம் சந்தித்தபோது, ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில் **சாராளிடத்திற்குப் போய்:** நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்றான். ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, **வேலைக்காரன் கையிலே கொடுத்தான்;** அவன் அதைச் சீக்கிரத்தில் சமைத்தான் (ஆதி. 18:6,7). மூன்று பேரை உபசரிப்பதற்கு, **சாராள் மற்றும் வேலைக்காரன்** ஆகிய இரண்டு பேர் உதவி செய்கிறார்கள்; இந்த இரண்டு பேருக்கும் இன்னும் அநேகர் உதவி செய்திருக்கக்கூடும். “தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்” (சங். 78:25) என்ற சூழ்நிலையினை நாம் அறிந்திருந்தபோதிலும், “மனுஷனின் அப்பத்தை தூதர்கள் சாப்பிட்டார்கள்” என்ற சுகமான நிலையினை ஆபிரகாமின் உபசரிப்பு அனுபவிக்கச் செய்ததே.

“பசியாயிருந்தேன்” “தாகமாயிருந்தேன்” “அந்நியனாயிருந்தேன்” “வஸ்திரமில்லாதிருந்தேன்” “வியாதியாயிருந்தேன்” (மத். 25:35,36) என்ற நிலையில் ஆண்டவரை பார்க்க நாம்

தவறிவிடுவோமென்றால், **நம்முடைய அப்பத்தை அவருக்குக் கொடுக்கும் பாக்கியத்தை நாம் இழந்துவிடக்கூடும்**. சாஸ்திரிகள் இயேசு கிறிஸ்துவை ஏரோதுவின் அரண்மனையிலேயே தேடிக்கொண்டிருந்ததுபோல, நாமும் தேடிக்கொண்டிருப்போமென்றால், வழியில் மரத்தடியில் நிற்கும் அவரை காணக்கூடாதபடி மரத்துப்போனவைகளாகவே நமது கண்கள் காணப்படும். **யோனாவிலும் பெரியவர், சாலொமோனிலும் பெரியவர் "எங்கே இருக்கிறார்?" என்பதை நாம் அறிந்தால் மாத்திரமே இச்சத்தியத்தின் சந்திப்பு நம்முடைய வாழ்க்கையில் சாத்தியமாகும்**. சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் **தன் பலனை அடையாமற் போகான்** என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் இயேசு (மத். 10:42). அப்படியே, **கூடாரத்தின் உள்ளே ஆண்டவருக்காகச் சமைத்தது, சாராளின் கூடாரத்துக்கு ஆசீர்வாதமாக மாறியது**. அப்பொழுது அவர்: ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். (ஆதி 18:10)

நாம் அவரைத் தேடும்போது, அவர் நம்மைத் தேடுகின்றார்; **"உன் மனைவி சாராள் எங்கே?"** என்று கேட்டு சாராளை ஆசீர்வதித்தார். ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று. **முதல் கூடாரத்தில் மறைந்திருந்தாள், இரண்டாவது கூடாரத்தில் நகைத்துக்கொண்டிருந்தாள், மூன்றாவது கூடாரமோ அடைபட்டுவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தாள்.** ஆகையால், சாராள் தன் உள்ளத்திலே நகைத்து: நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள் (ஆதி 18:11,12). இந்த மூன்று வாசல்களையும் தாண்டி உள்ளே பிரவேசித்து சாராளை ஆசீர்வதித்தார் ஆண்டவர். ஒருவேளை, நாமும் ஆண்டவருக்கு எல்லாவற்றையும் செய்துகொடுத்துவிட்டு, ஆனால், நம்முடைய வாழ்க்கையில் இதைச் செய்ய அவரால் கூடுமா? என கேள்விக்குறியோடு உள்ளத்தில் நகைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், **உன் மனைவி சாராய் எங்கே?** என்று கேட்டு சாராளை ஆசீர்வதித்த ஆண்டவர் மறைவாயிருந்தாலும் நம்மை தேடிவந்து ஆசீர்வதிக்கப் போதுமானவர். அவருடைய பார்வையை விட்டு ஒருபோதும் நாம் தூரமாவதில்லை.